# இரண்டாம் இடைப்பருவ தேர்வு - 2024

SIVANANDHA K M.A.,B.ed.
GHS SANDHANAPALLI
KELAMANGALAM BLOCK
DENKANIKOTTA TK
KRISHNAGIRI district
PH:9003373506

வகுப்பு :9

## கணிதம்

மொத்த மதிப்பெண் :50

நேரம் :1.30 மணிநேரம்

பிரிவு -I $7\times1=7$

குறிப்பு : சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதற்குரிய குறியீட்டுடன் எழுதவும்.

1. வட்டநாற்கரத்தின் ஒரு கோண அளவு 75° எனில், எதிர்கோணத்தின் அளவு
(1) 80° (2) 100° (3) 70° (4) 90°

2. AD ஐ விட்டமாகக் கொண்ட ஒரு வட்டத்தின் ஒருநாண் AB. இங்கு AD = 30 செமீ மற்றும் AB = 24 செமீ எனில் வட்டமையத்திலிருந்து AB அமைந்துள்ள தூரம்
(1) 10 செமீ (2) 9 செமீ (3) 8 செமீ (4) 6 செமீ

3. ஒரு புள்ளியின் y அச்சு தொலைவு 4 மற்றும் அப்புள்ளி y அச்சில் அமைந்தால் அப்புள்ளி--------
(1) (4, 0) (2) (0, 4) (3) (1, 4) (4) (4, 2)

4. (x + 2, 4) = (5, y - 2) எனில் (x, y) இன் மதிப்பு ------------
(1) (7, 12) (2) (6, 3) (3) (3, 6) (4) (2, 1)

5. (-a, 2b) மற்றும் (-3a, -4b) ஆகிய புள்ளிகளை இணைக்கும் கோட்டுத் துண்டின் நடுப்புள்ளியானது------------------
(1) (2a, 3b) (2) (-2a, -b) (3) (2a, b) (4) (-2a, -3b)

6. (1, -2), (3, 6), (x, 10) மற்றும் (3, 2) ஆகியன ஓர் இணைகரத்தின் வரிசையாக எடுக்கப்பட்ட முனைப்புள்ளிகள் எனில் x இன் மதிப்பானது---→
(1) 6 (2) 5 (3) 4 (4) 3

7. A(4, 1) மற்றும் B (x, y) என்பது ஒரு கோட்டுத்துண்டின் முனைப்புள்ளிகள் மற்றும் P(7, 5) ஆனது அக்கோட்டுத்துண்டை இரு சமபாகமாகப் பிரிக்கிறது எனில் புள்ளி B ஆனது____________________
(1) (10,9) (2) (5.5,3) (3) (20,18) (4) (8,6)

பிரிவு - II $5\times2=10$

குறிப்பு : ஏவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண்.14 கட்டாயவினா.

8. ஒரு நாற்கரத்தின் கோணங்களின் விகிதம் 2:4:5:7 எனில், அனைத்துக் கோண அளவுகளையும் காண்க.

9. ஆரம் 12 செமீ உள்ள வட்டத்தின் மையத்திலிருந்து $2\sqrt{11}$ செமீ தொலைவில் உள்ள நாணின் நீளம் காண்க.

10. வட்டத்தின் விட்டம் 52 செமீ மற்றும் ஒரு நாணின் நீளம் 20 செமீ எனில், மையத்திலிருந்து நாணிற்கு உள்ள தூரம் காண்க.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

11. ஒரு வட்டத்தின்மையம் (-4, 2). அந்த வட்டத்தில் (-3, 7) என்பது விட்டத்தின் ஒரு முனைஎனில், மற்றொரு முனையைக் காண்க.

13. (2- 4), (-3, -7) மற்றும் (7, 2) ஆகியவற்றை முனைப்புள்ளிகளாகக் கொண்ட முக்கோணத்தின் நடுக்கோட்டு மையம் காண்க.

14. A(3, 0) மற்றும் B(-5, 4) ஐ இணைக்கும் கோட்டுத்துண்டின் நடுப்புள்ளி X என்க. மேலும் P(-11, -8) மற்றும் Q(8, -2) ஐ இணைக்கும் கோட்டுத் துண்டின் நடுப்புள்ளி Y என்க. கோட்டுத்து XY இன் நடுப்புள்ளி காண்க.

## பிரிவு -III

5×5 = 25

குறிப்பு : எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினாஎண். 21 கட்டாய வினா.

15. இணைக்கரத்தின் கோண இருசமவெட்டிகள் செவ்வகத்தை அமைக்கும் என நிறுவுக.

16. 5 செமீ மற்றும் 3செமீ ஆரமுள்ள இரு வட்டங்கள், இரண்டு புள்ளிகளில் வெட்டிக் கொள்கின்றன. மேலும், அவற்றின் மையங்களுக்கு இடைப்பட்ட தொலைவு 4 செமீஎனில், பொது நாணின் நீளத்தைக் காண்க.

17. A(3,1), B(6 ,4) மற்றும் C(8, 6) என்ற புள்ளிகள் ஒரு கோடமையும் புள்ளிகள் என நிறுவுக.

18. புள்ளிகள் A(2, 3) மற்றும் B(2, -4) என்க. X அச்சின் மீது அமைந்துள்ள புள்ளி P ஆனது $AP = \frac{2}{7}AB$ என்ற வகையில் அமைந்துள்ளது எனில், புள்ளி P இன் அச்சுத்தொலைவைக் காண்க.

19. (-2,-1) மற்றும் (4, 8) ஆகிய புள்ளிகளை இணைக்கும் கோட்டுத்துண்டை மூன்று சமக்கூறிடும் புள்ளியின் ஆயத்தொலைவுகளைக் காண்க.

20. A(4,-3) மற்றும் B(9,7) ஆகியபுள்ளிகளைஇணைக்கும்கோட்டுத்துண்டை 3:2 என்ற விகிதத்தில் உட்புறமாகப் பிரிக்கும் புள்ளியின் ஆயத்தொலைவுகளைக் காண்க.

21. சாய்சதுரத்தின் மூலைவிட்டங்களின் நீளங்கள் 12 செமீ மற்றும் 16 செமீ எனில் சாய்சதுரத்தின் பக்கஅளவு காண்க.

## பிரிவு -IV

1×8 = 8

குறிப்பு : கீழ்கண்ட வினாவிற்கு விடையளிக்கவும்.

22. (அ) y = 3x-1 என்ற நேரிய சமன்பாட்டிற்கு வரைபடம் வரைக.

(அல்லது)

(ஆ) ஒருங்கமைந்த நேரிய சமன்பாடுகளுக்கு வரைபடம் மூலம் தீர்வு காண்க.
$3x + 2y = 4;\ 9x + 6y - 12 = 0.$

TTK-9-MAT-P-2

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com